# மதுக்கரை ஊராட்சி ஒன்றியம்
## ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை
## கோயம்புத்தூர் மாவட்டம்
## அறிவிப்பு

கோயம்புத்தூர் மாவட்டம் மதுக்கரை ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் ஊராட்சி ஒன்றிய பொது நிதியின் கீழ் ஊதியம் வழங்கப்படும் பணியிடங்களில் காலியாக உள்ள ஈப்பு ஓட்டுநர் பணியிடங்களை நேர்காணல் மூலம் நியமனம் செய்ய தகுதியுள்ள நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் 09.10.2023 அன்று பிற்பகல் 5.45 மணி வரை வரவேற்கப்படுகிறது.

**1. பணியிட விபரம்:**

| வ.எண் | பதவியின் பெயர் | காலிப் பணியிடங்கள் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | ஈப்பு ஓட்டுநர் | 1 |

**2. இன சுழற்சி விபரம் மற்றும் கல்வித்தகுதி:—**

| வ.எண் | பதவியின் பெயர் | இனசுழற்சி விபரம் | காலிப் பணியிடங்கள் எண்ணிக்கை | கல்வித் தகுதி |
|---|---|---|---|---|
| 1 | ஈப்பு ஓட்டுநர் | ஆதிதிராவிடர் (முன்னுரிமை அடிப்படையில் அருந்ததியினர்) பெண்கள் - ஆதரவற்ற விதவை | 1 | 'எட்டாம் வகுப்பு' தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். |
| | | மொத்தம் | 1 | |

**3. வயது (01.07.2019 அன்று:**

| வ.எண் | விபரம் | குறைந்த பட்ச வயது | அதிகபட்ச வயது |
|---|---|---|---|
| 1 | ஆதிதிராவிடர் அருந்ததியர் | 18 | 42 |

**நிபந்தனைகள்:**

1. தகுதியான விண்ணப்பதாரர்கள் தங்களது விண்ணப்பத்தினை https://coimbatore.nic.in இணையதளத்தில் உள்ள விண்ணப்பப் படிவத்தினை பதிவிறக்கம் செய்து பூர்த்தி செய்து அனுப்ப வேண்டும்.
2. இணையதளத்தில் பதிவிறக்கம் செய்யப்பட்ட விண்ணப்பத்தினை **ஆணையாளர், ஊராட்சி ஒன்றியம், மதுக்கரை** என்ற முகவரிக்கு நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ 09.10.2023 அன்று பிற்பகல் 5.45 மணிக்குள் அலுவலகத்திற்கு வந்தடையும் வகையில் அனுப்ப வேண்டும்.
3. விண்ணப்பதாரர்கள் தங்களது கல்வித் தகுதி சான்றிதழ்கள் நகலினை சுயசான்றொப்பம் செய்து விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்பப்பட வேண்டும்
4. பரிசீலனையில் விண்ணப்பதாரர்கள் அளித்த தகவல்கள் தவறு என கண்டறியப்பட்டால் அவரது விண்ணப்பம் தள்ளுபடி செய்யப்படும்.
5. குறிப்பிட்ட காலக்கெடுவிற்கு பின்னர் பெறப்படும் விண்ணப்பங்கள் கண்டிப்பாக நிராகரிக்கப்படும்.
6. அஞ்சல் தாமதங்களுக்கு நிர்வாகம் பொறுப்பு ஏற்காது.
7. தகுதியில்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
8. எந்த ஒரு விண்ணப்பத்தையும் நிராகரிக்கும் அதிகாரம் நிர்வாகத்திற்கு உண்டு.
9. அழைப்புக் கடிதம் பெறுவது மட்டும் வேலைக்கான உத்தரவு என்று கருதக்கூடாது.

**ஆணையாளர்,**
**ஊராட்சி ஒன்றியம்,**
**மதுக்கரை.**

வெ.ஆ.எண்.482/2023/செ.ம.தொ.அ./கோவை

**"சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம் சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்"**